யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC

# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | மனைப்பொருளியல் – II | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி – II

**பகுதி I இல் முதலாம் வினாவும் வேறு இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் ஐந்தாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி - I

(1) வீட்டைக் கொள்வனவு செய்வதைவிட காணியில் திட்டமிட்டு அழகான வீட்டை கட்டுவதற்கு தீர்மானித்த குமார் அதனை நிறைவேற்றினார். குமாரின் குடும்பம் அழனாக தனிக் குடும்பம். தமது குடும்பம் போல வீட்டையும் சுற்றுப்புறத்தையும் அழகாக வைத்திருப்பதில் குடும்ப அங்கத்தவர்கள் கைதேர்ந்தவர்கள் ஆவர்.

i) மனையைத் திட்டமிடும்போது படவரைஞரினால் பின்பற்றப்பட வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள் 5 தருக.

ii) மனையை அழகுபடுத்தி அமைப்பதற்கு பின்பற்ற வேண்டிய கலைத்துவ அடிப்படை அம்சங்கள் எவை?

iii) படுக்கை அறையின் உயரத்தை கூட்டிக் காட்டுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை?

iv) கிறிஸ்கோஸ், பிரிவலி, பெட்டிமடிப்பு ஆகிய திரைச்சீலையிடும் முறையை வரைந்து காட்டுக.

v) நிலாமுற்றம் அமைத்தல் மூலம் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் எவை?

(25 புள்ளிகள்)

(2) i) வீட்டிற்கு மின் வழங்கும் செயற்பாட்டை பாச்சர்க்கோட்டுப்படம் மூலம் விளக்குக.

ii) மின்இயக்கவிசை, மின்னோட்டம், தடை, வலு ஆகிய மின்கனிய உபகரணங்களை அளக்கும் அலகை எழுதுக.

iii) ஒரு வீட்டில் பயன்படும் மின் உபகரணங்களில் செலவாகும் மின்சாரத்தை கணிக்க. இவற்றிற்கு செலவாகும் மின்சாரத்தை கணிக்க.

| | வலு | எண்ணிக்கை | பயன்படுத்தும் நேரம் |
|---|---|---|---|
| மின்விளக்கு | 15 | 6 | 5 |
| தொலைக்காட்சிப் பெட்டி | 100 | 1 | 4 |
| மின்அழுத்தி | 500 | 1 | ½ |

இவற்றிற்கு செலவாகும் மின்சாரத்தை கணிக்க.

iv) வீட்டில் பயன்படுத்தும் எரிபொருளைச் சிக்கனப்படுத்துவதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கை 4 எழுதுக.

(20 புள்ளிகள்)

(3) i) இரவு உடைகளுக்காக துணியைத் தெரிவு செய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய 4 விடங்கள் எவை?

ii) ரேயோனின் உற்பத்திச் செயன்முறையை விவரிக்க.

iii) இன்றைய காலத்தில் தயாரித்த ஆடைகளில் மக்கள் கூடிய கவனம் செலுத்துகின்றனர். தயாரித்த ஆடைகளின் பயன்பாட்டின் அனுகூலம் 2 பிரதிகூலம் 2 தருக.

iv) மினுக்கிய நேர்த்தியை விளக்குக. (20 புள்ளிகள்)

(4) i) நற்காப்பு என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

ii) உணவு நற்காப்பு செய்வதன் நன்மைகள் எவை?

iii) உணவு நற்காப்புக்கு பயன்படுத்தப்படும் கோட்பாடுகள் எவை?

iv) நற்காப்புக்காக கையாளப்படும் பிரதானமான உத்திகளை எத்தனை வகையாக வகுக்கலாம், அவற்றுக்கு அமைவாக வகைப்படுத்தப்படும் நற்காப்பு முறைகள்? (20 புள்ளிகள்)

## பகுதி - II

**ஐந்தாம் வினாவிற்கும் வேறு மூன்று வினாக்களும் உட்பட நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

(5) சாருணி 2 பெண் பிள்ளைகளின் தாயாவார். கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்பவர்கள் போசனை அட்டவணைக்கு ஏற்ப உணவு தயாரிப்பதில் சாருணி திறமையானவள். போசணைச்சிக்கல் குடும்ப அங்கத்தவருக்கு ஏற்படாது உணவு தயாரிப்பார். வீட்டுத்தோட்டம் மூலம் காய்கறியை உற்பத்தி செய்வர்.

i) இக்குடும்பத்திற்கான மதிய உணவு ஒன்றைத் திட்டமிடுக.

ii) தற்போது இலங்கையில் காணப்படும் போசணைச் சிக்கல்கள் எவை?

iii) உணவு சமைப்பதன் நோக்கம் யாது?

iv) அத்தியவசிய அமினோஅமிலம் என்றால் என்ன?

v) காய்கறிகளை வீட்டுத்தோட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்வதால் ஏற்படும் நன்மை யாது? (25 புள்ளிகள்)

(6) i) சதையச் சாற்றில் காணப்படும் நொதியங்கள் 5 தருக.

ii) காபோவைதரேற்று அனுசேப செயன்முறையில் உட்சேபத்தொழிற்பாட்டை தருக.

iii) உணவுச் சமிபாடு என்றால் என்ன?

iv) சமிபாட்டுத் தொகுதியில் நிகழும் தொழிற்பாடுகள் எவை? (20 புள்ளிகள்)

(7) i) கறைகளுக்கு பயன்படும் கரைப்பான்களை வகைப்படுத்தி ஒவ்வொரு உதாரணம் தருக.

ii) சவர்க்காரமாக்கல் என்றால் என்ன?

iii) உலர்சலவைத் தொழிற்பாட்டின் பிரதான படிமுறைகள் எவை?

iv) ஓர் ஆடையில் காணப்படும் கறையை நீக்கும்போது கறை நீக்கியை பயன்படுத்தும் முறையை தருக. (20 புள்ளிகள்)

(8) i) கட்டிளமைப் பருவத்தை வயதிற்கு ஏற்ப வகைப்படுத்துக.

ii) கட்டியமைப்பருவத்தினரின் உளவிருத்தியை வெளிக்காட்டும் இலட்சணங்களை எழுதுக.

iii) கர்ப்பிணித் தாயின் நாளாந்த உணவில் இரும்புத் தேவை அதிகரிப்பதற்கு காரணம் யாது?

iv) கர்ப்பிணியின் உணவில் அயடின் குறைபாடு காரணமாக ஏற்படும் விளைவு யாது? (20 புள்ளிகள்)

(9) i) முன்பிள்ளைப் பருவத்தில் ஓர் பிள்ளைக்கான உணவு வேளையைத் திட்டமிடும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?

ii) உணவின் தரப் பண்புகளைப் பேணுவதிலுள்ள சிக்கல்கள் எவை?

iii) தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு பின்பற்ற வேண்டிய முறைகள் எவை?

iv) பிள்ளைகளின் உடல் விருத்தியைப் பாதிக்கும் காரணிகள் எவை? (20 புள்ளிகள்)